ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1521/29 - 2007 නොවැම්බර් 02 වැනි සිකුරාදා - 2007.11.02

1521/29 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. : 18

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரைகள்

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, கீழே, வகைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் சீமெந்து பைகள்/பொதிகளில் இலங்கை கட்டளை நிறுவனத்தின் குறியீடுகள் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் எஸ். எல். எஸ். உற்பத்தி சான்றுப்படுத்தல் குறியீடு இல்லாமல் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், பொதியிடுபவர், விநியோகிப்பவர் அல்லது வியாபாரி எவரேனும் தயாரிக்கவோ, இறக்குமதி செய்யவோ மற்றும் பயன்படுத்தவோ அல்லது விநியோகிக்கவோ, பொதி செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனைக்கு காட்சிப்படுத்தவோ, விற்பனை செய்யவோ, மொத்தமாக விற்பனை செய்யவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது. இது மேலும், அனைத்து வகை சீமெந்தும் குறித்த உற்பத்திக்கு பொருத்தமாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் கீழே வழங்கப்பட்டவாறான வகுப்பெயரையும் கொண்டிருத்தல் வேண்டுமெனவும் பணிப்புரை விடுக்கின்றது :-

(i) பிளன்டட் ஹைட்றோலிக் சீமெந்து - எஸ். எல். எஸ். 1247
(ii) போட்லண்ட் லைம்ஸ்ரோன் சீமெந்து - எஸ். எல். எஸ். 1253
(iii) மேசனறி சீமெந்து - எஸ். எல். எஸ். 515
(iv) சாதாரண போட்லண்ட் சீமெந்து - எஸ். எல். எஸ். 107

இப்பணிப்புரையானது 2008, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

கலாநிதி ஆர். எம். கே. ரத்நாயக்க,
பதில் தவிசாளர்.

கொழும்பு,
2007, ஒற்றோபர் 29.

11- 647

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.